சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS.326/2018

2023ம் ஆண்டு ஜூலை மாதம் 03ம் நாள் திங்கட்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.சித்ரா பென்ஞ் கிளார்க் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜானகி | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | சுந்தரமூர்த்தி | ஜாதி | |
| கிராமம் | முகலிவாக்கம் | சமயம் | |
| தாலுக்கா | சென்னை | வயது | |

**03.07.2023** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் 1ம் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 20.11.1969 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1,** 30.03.1985 தேதியிட்ட கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2,** கண்ணப்ப முதலியார் இறப்பு சான்று உண்மை நகல் **வா.சா.ஆ.3**, 14.03.2018 தேதியிட்ட 2ம் பிரதிவாதிக்கு எழுதிய தான செட்டில்மென்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4**, 14.03.2018 தேதியிட்ட 3ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த தான செட்டில்மென்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5**, 08.04.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ.6**, 1ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.7**, 2ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.8,** 3ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.9**, 4ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.10,** மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.